# 40 வருடங்கள் நீடித்த எதிர்ப்புரட்சி அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த ராஜபக்ச தலைமைத்துவமும், ஜனாதிபதி தேர்தலும்

இலங்கையில் 2010 ஜனவரி 26ல் மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த ஜனாதிபதி தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாட்டின் தேசபக்த, ஜனநாயக, முற்போக்கு சக்திகளின் கூட்டமைப்பான பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடுகின்றார். மறுபக்கத்தில் ஏகாதிபத்திய சார்பு, வலதுசாரி, இனவாத கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க), ஜனதா விமுத்தி பெரமுன (ஜே.வி.பி), தமிழ் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ) என்பனவற்றின் சார்பில் சிங்களப் பேரினவாதியும், போர் வெறியருமான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா போட்டியிடுகின்றார். அவர்கள் தவிர புதிய இடதுசாரி முன்னணி, சோசலிச சமத்துவக் கட்சி, போன்ற ரொட்ஸ்கியவாத குழுக்கள் உட்பட எல்லாமாக 18 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். சிலர் போட்டியிலிருந்து விலகி பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கவும் முன்வந்துள்ளனர். அவர்களில் சிலர் பணத்துக்கு விலை போயுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில், சாதாரண பொதுமக்களுக்கு குழப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கை மக்களைப் பொறுத்த வரையில், பெரும்பாலான தேர்தல்களின் போது அவர்களின் தெரிவு முற்போக்கு சக்திகளாக இருந்த வரலாற்றை எடுத்து நோக்குகையில், அவாகள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் மகிந்த ராஜபக்சவுக்கு தமது வாக்குகளை அளிக்கப் போவது திண்ணம். இருந்த போதிலும் தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக் கொள்ளும் ரொட்ஸ்க்கியவாதிகளும், அரைகுறை இடது போக்கானவர்களும் மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை உருவாக்க முயன்று வருகின்றனர்.

அவர்களில் ஒரு சாரார், மகிந்த ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என கூச்சல் போடுகின்றனர். இன்னொரு சாரார், தேசப்பற்றுள்ள மகிந்த ராஜபக்சவையும், ஏகாதிபத்தியக் கைக்கூலி சரத் பொன்சேகாவையும் சரி சமமாக ஒரே தராசில் வைத்து நிறுக்க முயல்கின்றனர். இன்னொரு சாரார், மார்க்சிசத்தின் பெயரால் எப்பொழுதும் பொது எதிரிக்கு உதவுவதுடன், பாசிசப் புலிகளுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வந்த புதிய இடதுசாரி முன்னணி வேட்பாளர் விக்கிமபாகு கருணரத்னவுக்கு வாக்களிக்க வேண்டும் என்கின்றனர். வேறொரு பகுதியினர் தேர்தலைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்ற யதார்த்தபூர்வமற்ற, கேலிக்கூத்தான கருத்தை வலியுறுத்துகின்றனர்.

நாட்டின் எதிர்காலத் தலைவிதியையும், செல் நெறியையும் தீர்மானிக்கப் போகும் இந்த அதி முக்கிய தேர்தல் சம்பந்தமாக, இந்த சீர்குலைவாளர்கள் அனைவரும் முன் வைக்கும் கருத்துக்கள் பொது எதிரியான சரத் பொன்சேகாவுக்கு ஆதரவானவை என்பது சொல்லாமலே விளங்கும். இந்த இடத்தில் நாம் ஜே.வி.பியை ஒரு இடதுசாரிக் கட்சியாகக் கருதவில்லை என்பதையும் சொல்லி வைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் சிவப்பு கொடிகளை அசைத்துக் கொண்டு, மார்க்சிசம் பற்றி தொண்டை கிழியப் பேசினாலும், அவர்கள் உண்மையில் முதலாளித்துவப் போக்கும், பேரினவாத எண்ணமும் கொண்ட மக்கள் விரோதிகளாவர். அதனால் தான் அவர்கள் எப்பொழுதும் இலங்கை மக்களின் பொது எதிரியாக விளங்கும் ஐ.தே.கவின் அணியில், தமது வேசத்தைக் கலைத்துவிட்டு, எவ்வித தயக்கமும் இன்றி இணைந்துள்ளர்.

இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும், அது சம்பந்தமாக நாம் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்று தீர்மானிக்கவும், குறைந்த பட்சம் இலங்கையின் கடந்த நான்கு தசாப்த வரலாற்றையாவது, மார்க்சிச – லெனினிச வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது அவசியம். இல்லாவிடின் மாபெரும்

புரட்சிவாதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டது போல, தத்துவார்த்த வெளிச்சம் இல்லாது இருட்டில் தடுமாறுபவர்களாகவும் அல்லது நடைமுறை அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு இலக்கில்லாது செயற்படுபவர்களாகவும் தடுமாற நேரிடும். இன்று சரத் பொன்சேகாவை ஆதரித்து நிற்கும் ஐ.தே.க, ஜே.வி.பி, த.தே.கூ என்பன கடந்த காலங்களில் இலங்கை அரசியலில் வகித்த எதிர்ப்புரட்சிகரப் பாத்திரத்தை ஒருவர் புரிந்து கொண்டால் தான், அவர்கள் இன்று ஒரு அணியில் நின்று ஏன் செயற்படுகிறார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அதே வேளையில் புலிகளைத் தோற்கடித்ததின் மூலம், இலங்கையில் கடந்த நான்கு தசாப்த காலமாக நீடித்த எதிர்ப்புரட்சி அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எத்தகைய வரலாற்றுப் பாத்திரத்தை வகித்துள்ளா என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் சுமார் 30 வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தத்தை, மகிந்த ராஜபக்ச அரசாங்கம், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்த ஒரு சூழ்நிலையில், இந்தத் தேர்தல் நடைபெறுகிறது என்பது, இந்தத் தேர்தலின் விசேட அம்சமாகும். இந்த யுத்தம் 1977ல் பதவிக்கு வந்த ஐ.தே.கவைச் சேர்ந்த படு வலதுசாரி பிற்போக்குவாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் அவரது கட்சியைச் சேர்ந்த இன்னொரு ஆட்சியாளர் ஆர்.பிரேமதாச காலத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. பின்னர் 1994ல் அதிகாரத்துக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க காலத்திலும் தவிர்க்க முடியாது தொடரப்பட்டது. அதன் பின்னர் அதே கட்சியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ச 2005 டிசம்பரில் ஆட்சிக்கு வந்த பின்னரும், புலிகளின் பிடிவாதமான யுத்தப் போக்கினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, 2009 மே 18 திகதி புலிகளை யுத்தகளத்தில் இறுதியாகத் தோற்கடித்ததின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சுமார் நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் இந்த யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், ஆட்சியில் இருந்த ஒவ்வொருவரும் தமது ஆட்சிக்காலத்தில் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பல முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். ஆனால் யுத்தத்தின் மறுபக்க பங்காளிகளான விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஐக்கியப்பட்ட ஒரு நாட்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதற்குப் பதிலாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பெயரால் தனியான ஒரு அரசை நிறுவி, அதன் மூலம் சர்வாதிகாரத்தனமான ஒரு ஆட்சிமுறையை நடாத்துவதற்கு விரும்பியதால், எந்தவிதமான சமாதான முயற்சிகளும் பயனளிக்காமல் போய்விட்டன.

புலிகளின் இந்த சமாதான விரோதப் போக்குகளுக்குப் பின்னால், முக்கியமான சில காரணிகளும் இருந்தன. ஒன்று இந்த இனப்பிரச்சினையை யுத்தமாக்கிய ஐ.தே.க, இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே சிங்களப் பேரினவாதப் போக்கு உடையதாக இருந்ததுடன், ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில், அதை உள்நாட்டு யத்தமாகவும் மாற்றியது. ஏனெனில் யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து பேணுவதன் மூலம், தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றுவதுடன், எதிர்க்கட்சிகளை அடக்கி, தனது ஆட்சி அதிகாரத்தை நீடிப்பதற்கு அதை ஒரு கருவியாகவும் பாவிக்க விரும்பியது. எனவே அது சமாதான முயற்சிகளை பெயரளவில் தான் எடுத்து வந்தது. அவரது இந்த கபடத்தனமான நடவடிக்கைகள் மறுபக்கத்தில் புலிகளுக்கு தாம் விரும்பியமைச் சாதிப்பதற்கு வசதியாக அமைந்தது.

இரண்டாவது விடயம், இலங்கையில் இனப்பிரச்சினையை ஆரம்பித்து வைத்தவர்கள், இங்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி நடாத்திய பிரித்தானிய காலனித்துவவாதிகள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். 1948ல் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இலங்கையை விட்டு வெளியேறிய பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள், சுதந்திரம் என்ற பெயரில் ஆட்சியை தமக்கு விசுவாசமான, பேரினவாத ஐ.தே.கவிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். சுதந்திர இலங்கையின்

முதலாவது ஆட்சியை அமைத்த ஐ.தே.க., வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களை அமைத்து, இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை – வாக்குரிமை என்பனவற்றைப் பறித்து. தமிழ் மக்களுக்கு எதிராக பல இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஐ.தே.க அரசின் இந்த நடவடிக்கைகள் குறித்து, பிரித்தானியாவோ அல்லது வேறு எந்த மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளுமோ ஒருபோதும் கவனம் செலுத்தியதோ அல்லது பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்காக குரல் எழுப்பியதோ கிடையாது. பதிலுக்கு தமக்கு விசுவாசமான பெரு முதலாளித்துவ ஐ.தே.க அரசைப் பாதுகாப்பதிலேயே அக்கறையாக இருந்தன.

இந்தச் சூழ்நிலையில் 1956ல் ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.கவை தோற்கடித்துவிட்டு, ஏகாதிபத்திய எதிர்ப்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சி எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சிக்கு வந்தது. அந்த அரசாங்கம் இடதுசாரிக் கட்சிகளினதும், சோசலிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளினதும் ஆதரவைப் பெற்றதாகவும் இருந்தது. அதற்குக் காரணம், பண்டாரநாயக்க அரசாங்கம், இலங்கை 1948ல் பெற்ற சுதந்திரத்தைப் பூரணப்படுத்தும் பொருட்டு, பல ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளையும், முற்போக்கு நடவடிக்கைகளையும் எடுத்தமையாகும். அதனால் சீற்றமடைந்த ஏகாதிபத்திய சக்திகள் தமது கைக்கூலிகளான ஐ.தே.கவினதும், தமிழரசுக் கட்சியினதும் மூலம் நாட்டில் இனக் கலவரங்களை உருவாக்கியதுடன், பிற்போக்கு சக்திகளின் உதவியுடன், 1959 செப்ரெம்பரில் பண்டாரநாயக்கவை படுகொலை செய்து, அவரது ஆட்சிக்கு முடிவு கட்ட முயன்றன.

ஆனால் இலங்கை மக்களின் முற்போக்குப் பயணத்தை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. பண்டாரநாயக்கவின் கொலையைத் தொடர்ந்து 1960ல் நடந்த தேர்தலில் மீண்டும் பண்டாரநாயக்கவின் விதவை மனைவியான சிறீமாவோ பண்டாரநாயக்கவை நாட்டுமக்கள் ஆட்சியில் அமர்த்தினர். சிறீமாவோவின் அரசாங்கமும் இடதுசாரிகளின் உதவியுடன், தனது கணவரின் வழியில் தொடர்ந்து செயற்பட்டு, பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை முனைப்புடன் நடைமுறைப்படுத்தியது. அவரது நடவடிக்கைகளுக்கு இலங்கையின் முற்போக்கு மக்களும், சோசலிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளும் பூரண ஆதரவு வழங்கினர். இதனால் மீண்டும் சினமும் சீற்றமும் அடைந்த ஏகாதிபத்திய சக்திகள், 1962ல இராணுவத்திலிருந்த ஐ.தே.கவுக்கு சார்பான வலதுசாரிச் சக்திகள் மூலம் இராணுவச் சதி ஒன்றை நடாத்தி அவரது ஆட்சியைக் கவிழ்க்க முயன்றனர். ஆனால் இராணுவத்திலிருந்த தேசபக்த சக்திகள் மூலம் அச்சதி உரிய நேரத்தில் முறயடிக்கப்பட்டது.

இராணுவச் சதி கைகூடாத நிலையில், 1964ல் ஐ.தே.கவுக்கு சார்பான ஏகபோக பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ்சை தேசியமயமாக்க சிறீமாவோ அரசாங்கம் கொண்டு வந்த பத்திரிகை மசோதாவை சாட்டாக வைத்து, ஆளும் கட்சியிலிருந்து சிலரை விலை கொடுத்து எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்கு மாற்றியதின் மூலம், பத்திரிகை மசோதாவைத் தோற்கடித்து சிறீமாவோவின் அரசைக் கவிழ்த்தனர். அதன் மூலம் இலங்கை மக்களின் முற்போக்குப் பயணத்தைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினர்.

ஏகாதிபத்திய சக்திகள் சிறீமாவோ அரசை தோற்கடித்ததின் பின்னர், 1965ல் பொதுத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சூழலில், ஐ.தே.க வேறு 6 கட்சிகளின் உதவியுடன் கூட்டாட்சி ஒன்றை நிறுவியது. அதில் இரண்டு கட்சிகள் மோசமான சிங்கள இனவாதிகளான கே.எம்.பி ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க ஆகியோரின் கட்சிகளாகும். ஏனைய இரண்டு கட்சிகள் மோசமான தமிழ் இனவாதம் பேசித் திரிந்த தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியுமாகும். எதிரும் புதிருமான இந்த இனவாதக் கட்சிகள், தமது வர்க்க நலன் கருதி ஒரே அரசாங்கத்தில் அங்கம் வகித்தன.

இந்த ஏழு கட்சிக் கூட்டணி அரசாங்கம் ஒரு பக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தின் வயிற்றில் அடித்து, அவர்களை அடக்கியொடுக்கியது. மறு பக்கத்தில் கட்டுப்பாடற்ற

முறையில் உணவுப்பொருட்கள், துணிவகைகள், கடலுணவுகள் போன்றவற்றை இறக்குமதி செய்து, விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் வாழ்க்கையை அதல பாதாளத்தில் தள்ளியது. உலக வங்கியின் ஆலோசனையைக் கேட்டு ரூபாயின் மதிப்பைக் குறைத்ததுடன், மக்களுக்கு வழங்கி வந்த இலவச அரிசியையும் நிறுத்தியது. வடபகுதியில் தீண்டாமைக்கும், சாதி அமைப்புக்கும் எதிராகப் போராடிய சுமார் 5 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் உதவியுடன் அடக்கி ஒடுக்கியது. தமிழ் மக்களின் பிர்ச்சினைகளுக்கு மாவட்ட சபைகள் மூலமாகத் தீர்வு காண்பதாகச் சொல்லிவிட்டு, தீர்வு எதுவும் காணாமல் ஏமாற்றியது.

இந்த காரணிகளால் அடுத்து வந்த 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், தெற்கில் ஐ.தே.கவும், வடக்கு கிழக்கில் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் மக்களால் படு மோசமாகத் தோற்கடிக்கப்பட்டன. சிறீமாவோ தலைமையிலான சிறீலங்கா – சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளின் மக்கள் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று அமோக வெற்றியீட்டியது. இந்தக் கட்சிகளின் முற்போக்குக் கூட்டணி அரசாங்கம், முன்னைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான முற்போக்கு அரசாங்கங்கள் மேற்கொண்ட, ஏகாதிபத்திய – விரோத, முற்போக்கு நடவடிக்கைகளை மேலும் உறுதியுடன் முனனெடுத்துச் சென்றது. அதில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை என்னவெனில், 1972ல் இலங்கையை பிரித்தானிய முடியரசின் கீழான ஆட்சியிலிருந்து விடுவித்து குடியரசு ஆக்கியதுடன், அதுவரை அமுலிலிருந்த, பிரித்தானிய காலனித்துவவாதிகள் உருவாக்கிய சோல்பரி அரசியல் சாசனத்தை தூக்கி வீசிவிட்டு, புதிய குடியரசு அரசியல் சாசனத்தை உருவாக்கியதாகும்.

இலங்கையின் முற்போக்கு அரசாங்கம் எடுத்த இந்த நடவடிக்கைகள் மூலம், பிரித்தானியா உட்பட மேற்குலக ஏகாதிபத்திய சக்திகள் ஒரு உண்மையை உணர்ந்து கொண்டன. அதாவது இலங்கை மக்கள் அதிலும் குறிப்பாக சிங்கள மக்கள், ஏகாதிபத்தியத்தை வெறுப்பதுடன், அதற்குச் சாபான ஐ.தே.கவையும் ஆட்சிக்கு வர அனுமதிக்கமாட்டார்கள் என்பதே அதுவாகும். எனவே இலங்கையை பழிவாங்கும் நோக்குடன் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அதில் முக்கியமானது, இலங்கையை குடியரசு ஆக்கியதற்கு எதிரான ஒரு இயக்கத்தை, தமிழ் மக்களின் உரிமையின் பெயரால், தமிழ் பிற்போக்குவாத, பிரிவினைவாத கட்சியான தமிழரசுக் கட்சியின் மூலம் தூண்டிவிட்டமையாகும்.

அதற்கு வசதியான ஓர் நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தவர் வேறுயாருமல்ல. அதாவது ஒரு காலத்தில் தமிழர்களுக்கு சிங்களவர்களுடன் சம அந்தஸ்து வேண்டும் என்பதைத் தனது கொள்கையாக வைத்திருந்து, அதனால் சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்து, அதன் காரணமாக சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முடியாமலும், அதே வேளையில் மறுபக்கத்தில் அந்த நிலைப்பாட்டுக்கு பிரதிபலனாக தமிழர்களின் ஆதரவை எதிர்பார்த்து, அதுவும் கைகூடாமல் போய் விரக்தியில் இருந்த, சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி.சில்வா, புதிய அரசியல் சாசனத்தை வரையும் போது, தமிழ் மக்களின் அபிலாசைகளை அதில் பிரதிபலிக்காததுடன், சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்கு என இருந்த 28வது சரத்தையும் நீக்கிவிட்டிருந்தார். அது தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

எனவே இந்த நிலைமையை வாய்ப்பாக்கிக் கொண்ட தமிழரசுக் கட்சி, மக்கள் மத்தியில் இழந்து போன தனது செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு, அரசுக்கு எதிரான சட்ட விரோதமான போராட்டங்களை நடாத்த ஆரம்பித்தது. அவர்களின் அந்தப் போராட்டத்துக்கு ஏகாதிபத்தியத்தின் - குறிப்பாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் - மறைமுக ஆதரவு இருந்ததுடன், ஐ.தே.கவின் ஆதரவும் இருந்தது. தமிழாகளின் அரச விரோத எதிர்ப்பை ஒருமுகப்படுத்துவதில் ஏகாதிபத்திய சக்திகள் அதிக அக்கறை காட்டின. எனவே அதுவரைகாலமும் பாராளுமன்ற அரசியலில் எதிரும் புதிருமாக செயல்பட்டு வந்த தமிழரசுக் கட்சியையும், தமிழ் காங்கிரஸ் கட்சியையும் அவர்கள் முயற்சி எடுத்து ஒற்றுமைப்படுத்தினர். அதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி

(த.வி.கூ) என்ற பொது அமைப்பு ஒன்றை உருவாக்கியதுடன், தமிழ் மக்கள் மத்தியில் செயற்பட்டு வந்த சிறிய அளவிலான வேறு சில தமிழ் பிரிவினைவாத, தேசியவாத கட்சிகளையும் அதனுடன் இணைத்துக் கொண்டனர்.

த.வி.கூவின் நோக்கம் தமிழ் மக்களுக்கு விடுதலை பெறுவது தான் என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையில் பிரிவினைவாத வன்செயல் செயற்பாடுகள் மூலம், அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தி, அரசை பலவீனமாக்குவதாக இருந்தது. அதன் மூலம் தனது வர்க்க – அரசியல் சகாவான ஐ.தே.கவை ஆடசிக்கு கொண்டு வரும் நோக்கத்தைக் கொண்டதாகவும் இருந்தது. எனவே தான் ஐ.தே.க, தமிழர் விடுதலைக் கூட்டணி 1976ல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி நாட்டைப் பிரிக்கும் 'தமிழீழ தனியரசு' தீர்மானத்தை எடுத்த போதும், அதைக் கண்டுகொள்ளாமல், தனது கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான அப்போதைய கல்குடா பாராளுமன்ற உறுப்பினரான கே.டபிள்யூ.தேவநாயகத்தை த.வி.கூயில் ஐ.தே.க சார்பாக இணைந்து கொள்வதற்கு அனுமதியளித்தது.

த.வி.கூ ஆரம்பித்து வைத்த இந்தப் பிரிவினைவாத அரசியலுக்குப் பின்னால் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகள் இருக்கின்றன என்பதை, எமது அயல்நாடாகவும், அதே வேளையில் தனது பிராந்திய அரசியல் நலன்களுக்கு பூகோள அடிப்படையில், இலங்கையின் நட்புறவு அவசியம் என்பதை எப்பொழுதும் கவனத்தில் வைத்திருந்த இந்தியா புரிந்து கொண்டது. எனவே சிறீமாவோ அரசுடன் கொண்டிருந்த ஆழமான பாரம்பரிய நட்புறவைப் பேணிய அதே வேளையில், இந்திராகாந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம், த.வி.கூ ஏகாதிபத்திய சக்திகளின் சதி வலையில் விழுவதைத் தடுப்பதற்காக, அதனுடனும் நெருக்கமான உறவுகளைப் பேண ஆரம்பித்தது. அன்றைய உலகச் சூழலில் அமெரிக்க – சோவியத் வல்லரசுகளுக்கிடையில் தீவிரமான பனிப்போர் நிலவிக் கொண்டிருந்த படியால், சோவியத் யூனியன் பக்கம் இருந்த இந்திராகாந்தி, இலங்கையில் எந்த வகையிலும் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தைய சக்திகளின் செல்வாக்கு ஏற்படாதபடி பார்த்துக் கொள்வதில் தீவிரமாக இருந்தார். ஆனால் அதையும் மீறி ஏகாதிபத்திய சக்திகள் தமிழ் பிற்போக்குச் சக்திகளுடன் தமது உறவை வலுப்படுத்துவதில் தீவிரமாக இருந்தன.

இவை ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் 1966ல் இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கருத்து முரண்பாடுகள் காரணமாக பிரிந்து சென்று ஜே.வி.பி கட்சியை உருவாக்கிய ரோகண விஜேவீர, சாதாரண கிராமப்புற சிங்கள இளைஞர்களை சிங்கள இனவாத அடிப்படையிலும், வன்செயல் பாதையிலும் அணிதிரட்டுவதில், முனைப்புடன் செயல்பட்டு வந்தார். 1965 – 70 வரை ஆட்சியிலிருந்த ஐ.தே.க தலைமையிலான கூட்டரசாங்கம் பின்பற்றிய மக்கள் விரோதக் கொள்கைகள் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் மோசமான வறுமை தாண்டவமாடியதுடன், வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டிருந்தது. அதன் காரணமாக, ஏராளமான சிங்கள இளைஞர்கள் விஜேவீரவின் ஜே.வி.பி அமைப்பில் சேரத் தொடங்கினர். ஜே.வி.பி ஒரு குட்டி முதலாளித்துவ, எதிர்ப் புரட்சிகர இயக்கம் என, அதன் தலைவர் விஜேவீர முன்னர் அங்கம் வகித்த சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி பல தடைவ எச்சரித்த போதிலும், சாதாரண சிங்கள இளைஞர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல், அதில் இணைந்து கொண்டிருந்தனர்.

மறுபக்கத்தில், 1970 பொதுத் தேர்தலில் மோசமாகத் தோற்கடிக்கப்பட்டிருந்த ஐ.தே.கவும், அதன் ஏகாதிபத்திய எஜமானர்களும், சிறீமாவோ தலைமையிலான முற்போக்கு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தத் தயாராகக் காத்திருந்தனர். அவர்கள் ஒருபக்கத்தில் த.வி.கூவின் பிரிவினைவாத நடவடிக்கைகளை ஊக்குவித்துக் கொண்டிருந்த அதே வேளையில், மறுபக்கத்தில் ஜே.வி.பியை பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டனர். அதாவது ஜே.விபியின் இனவாதப் போக்கையும், வன்செயல் போக்கையும் பயன்படுத்தி அரசுக்கு நெருக்கடி கொடுப்பது அவர்களது திட்டமாக இருந்தது.

ஜே.வி.பி மார்க்சிசம் தனது கொள்கை என்றும், சோசலிசம் தனது குறிக்கோள் என்றும் பேசிக் கொண்டாலும், வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டு இளைஞர் சக்தியே புரட்சிகர சக்தி என்ற முதலாளித்துவ சித்தாந்தத்தையே பிரச்சாரப்படுத்தி வநதது. ஒருவருடைய வர்க்கப் பின்னணி, அரசியல் நிலைப்பாடு, தனிப்பட்ட குணாம்சங்கள் என்பனவற்றை ஆராயாமலும், கணக்கெடுக்காமலும், அவர் இளைஞர் என்றால், புரட்சிகரமானவர் என்று கூறி, அவரை ஜே.வி.பியில் சேர்க்கும் நடைமுறையை அது பின்பற்றியது. இந்த நடைமுறை ஐ.தே.கவுக்கு, ஜே.வி.பிக்குள் ஊடுருவுவதற்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது.

முன்னர் ஆட்சியில் இருந்த ஐ.தே.க கூட்டரசாங்கம் வேலையற்ற இளைஞர்களின் எதிர்ப்பைத் திசைதிருப்புவதற்காக, நாடு முழுவதும் ‘விவசாயப்படை’ என்ற பெயரில் இளைஞர்களைத் திரட்டி, மிகக் குறைந்த சம்பளத்தில், தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒரு அமைப்பை உருவாக்கி வைத்திருந்தது. 1970ல் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முன்னரே அப்படை ஐ.தே.க அரசால் கலைக்கப்பட்டு விட்டது. அது கலைக்கப்படுவதற்கு முன்னர், ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபா கொடுத்து, சிங்களப் பகுதிகளில் ஐ.தே.கவுக்கும், தமிழ்ப் பகுதிகளில் தமிழ் காங்கிரசுக்கும் தேர்தல் வேலைகள் செய்யும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் தேர்தலில் ஐ.தே.க மீண்டும் வெற்றி பெறாததால், ‘விவசாயப் படை வீரர்கள்’ வேலையற்றவர்களாகி விட்டனர்.

எனவே பெரும்பாலும் ஐ.தே.கவுக்கு சார்பான இந்த இளைஞர்களை, தனது தேவைக்கு உபயோகிக்க ஐ.தே.க தீர்மானித்தது. முன்னர் விவசாயப்படைக்கு பொறுப்பாக ஐ.தே.க அரசால் நியமிக்கப்பட்டிருந்தவர், அக்கட்சிக்கு மிகவும் விசுவாசமான முன்னாள் இராணுவ கப்டன் செனவிரத்ன ஆகும். இவர் ஐ.தே.கவின் மறைமுகமான நிகழ்ச்சி நிரலுடன் முதலில் ஜே.விபியில் இணைந்து கொண்டார். பின்னர் தனக்கு விசுவானமான பல முன்னாள் விவசாயப்படை இளைஞர்களையும் அதில் சேர்த்துக் கொண்டார். இவர்கள் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலம் சிறீமாவோவின் அரசைக் கவிழ்த்துவிட்டு, ஜே.வி.பியின் அரசை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை, ஜே.வி.பி தலைமைக்கு தீவிரமாக ஊட்டிய வண்ணம் இருந்தனர். இவர்கள் மூலமாக ஐ.தே.க நடாத்த இருந்த சதி நடவடிக்கையை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், அந்தக் காலகட்டத்தில் ஐ.தே.க. தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிகழ்த்திய ஒரு உரையைக் கவனித்தாலே போதுமானது.

அந்தக் காலகட்டத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.ஆர், ‘‘நான் இன்று ஒரு இளைஞனாக இருந்தால், ஜே.வி.பியில் தான் இருப்பேன்’’ என இளைஞர்களைத் தூண்டிவிடும் விதத்தில் பேசினார். அவரது பேச்சை, அப்பொழுது ஐ.தே.கவுக்கு மிகவும் நெருக்கமானவராகவும், ஜே.ஆரின் மைத்துனராகவும் இருந்த, டீ.ஆர்.விஜேவர்த்தனவுக்கு சொந்தமான, ‘டெயிலி நியூஸ்’ 1971 ஏப்ரல் 02ந் திகதி தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தது. அதுமாத்திரமின்றி, அதே செய்தியை, இரண்டு நாட்கள் கழித்து, ஏப்ரல் 04ந் திகதி மறுபிரசுரம் செய்தது. அதாவது தோல்வியிலும், அழிவிலும் முடிந்த, ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் 05ந் திகதி கிளர்ச்சி ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக மறுபிரசுரம் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்பார்த்தது போலவே ஜே.வி.பி 1971 ஏப்ரல் 05ந் திகதி சிறீமாவோ அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி ஒன்றில் ஈடுபட்டு அரசைக் கவிழ்க்க முயன்றது. இந்தக் கிளர்ச்சிக் காலத்தில், ஐ.தே.கவும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களும் இலங்கையில் பல சதி, சூழ்ச்சி நடவடிக்கைகளில் இறங்கினர். ஒரு பக்கத்தில் ஜே.வி.பியினால் தவறாக வழி நடாத்தப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்களப் புரட்சிகர இளைஞர்களை ஆயுதப்போராட்டம் என்ற பெயரில் அழிவுக்குள்ளாக்கினர். மறுபக்கத்தில் நெருக்கடியான ஒரு நேரத்தில், ஒரு பெண்ணான சிறீமாவோ பண்டாரநாயக்கவால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்று சொல்லி, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு பிளவை உண்டாக்கி, அக்கட்சிக்குள் வலதுசாரி சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவை அரசுத் தலைவராகக் கொண்டு வர முயன்றனர். இன்னொரு பக்கத்தில் ஆட்சியில் பங்காளிகளாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியையும், சமசமாஜக் கட்சியையும், ஆட்சியில் பங்குபற்றாத சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியையும் ஜே.வி.பி கிளர்ச்சிக்கு

உடந்தையானவர்கள் என்று சொல்லி அடக்குமுறைக்கு உள்ளாக்கினர். வேறொரு பக்கத்தில் சீனா, வட கொரியா போன்ற நாடுகள் தான் ஜே.வி.பிக்கு ஆயுதங்கள் வழங்கியவை என்று கூறி அவற்றுடனான ராஜதந்திர உறவுகளை துண்டிக்க வைக்க முயன்றனர்.

இவ்வாறு ஜே.வி.பியின் எதிர்ப்புரட்சிகரக கிளர்ச்சியைப் பயன்படுத்தி, நாட்டில் ஒரு வலதுசாரிப் பிற்போக்கு ஆட்சியையும், எதிர்ப்புரட்சிகர சூழ்நிலையையும் உருவாக்க முயன்றனர். ஆனால் அவர்களது திட்டம் சிறீமாவோவின் நிதானமான போக்கினாலும், முற்போக்கு சக்திகளின் விழிப்பினாலும், சோசலிச சீனா, ஜே.வி.பி கிளர்ச்சியை ஒரு 'எதிர்ப்புரட்சிகரக் கிளர்ச்சி' என பகிரங்கமாக அறிவித்ததினாலும் தவிடு பொடியாக்கப்பட்டது. இருப்பினும் அதன் பின்னரே இலங்கை இராணுவத்தின் தொகை பல ஆயிரங்களால் அதிகரிக்கப்பட்டதுடன், 6 ஆயிரம் பேராக இருந்த பொலிசாரின் தொகையும் இரு மடங்காக்கப்பட்டது. அதன் மூலம் முதலாளித்துவ அரசு யந்திரம் சுதந்திரத்துக்குப் பின்னர் முதல் தடவையாக மிகவும் சக்திமிக்கதாகப் பலப்படுத்தப்பட்டது. அது பிற்காலத்தில் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் நடாத்தும் போராட்டங்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது. இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், ஜே.வி.பி கிளர்ச்சி என்பது முற்போக்கு சக்திகளுக்கு எதிராக, வலதுசாரி சக்திகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் போய் முடிந்தது.

ஜே.வி.பி 1971ல் நடாத்திய கிளர்ச்சி எதிர்ப்புரட்சி நோக்கம் கொண்டது அல்லது வலதுசாரிச் சக்திகளால் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. முதலாவதாக அது நடாத்தப்பட்ட சூழலை எடுத்துப் பார்த்தாலே அந்த உண்மை தெளிவாகத் தெரிய வரும். 1970ல் சிறீலங்கா – சமசமாஜ - கம்யூனிஸ்ட் மக்கள் கூட்டரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வருகின்றது. அது ஆட்சிக்கு வந்து சரியாக ஒரு வருடத்தில் ஜே.வி.பி தனது ஆயுதக் கிளர்ச்சியை நடாத்துகின்றது. ஒரு முற்போக்கு அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி நடாத்துவது என்பது தவறானது என்பது ஒருபுறமிருக்க, மக்களின் அமோக செல்வாக்குடன் வந்த ஒரு அரசாங்கம், ஒரு வருடத்துக்குள் எவ்வாறு செல்வாக்கு இழந்து மக்களின் அதிருப்தியைப் பெற்றிருக்கு முடியும்? எவ்வாறு ஒரு புரட்சிக்கான சூழல் உருவாக்கி இருக்க முடியும்?

அடுத்த விடயம், மக்கள் புரட்சி என்பது பலம் வாய்ந்த ஒரு அரசு இயந்திரத்தை ஒரு நாளில் தூக்கி எறிந்துவிடும் நடவடிக்கை அல்ல. அவ்வாறான ஆட்சிக் கவிழ்ப்புகளை இராணுவச் சதிகள் என்றே சொல்ல முடியும். ஜே.வி.பி சாதாரண துப்பாக்கிகள் மூலம் நாட்டுப் புறங்களிலிருந்த சில பொலிஸ் நிலையங்களைத் தாக்கி, சில பொலிஸ் நிலையங்களை இரண்டு மூன்று நாட்கள் வைத்திருந்ததேயொழிய, நாட்டின் தலைநகரையோ, அரசு யந்திரத்தின் முக்கிய உறுப்புகளான படைத் தலைமையகங்கள், ஊடக நிலையங்கள், விமான மற்றும் துறைமுகங்கள், சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள் என்பவற்றைக் கைப்பற்றும் திட்டங்கள் எதையும் வைத்திருக்கவில்லை. தலைநகரைக் கைப்பற்றும் பொறுப்பை தாம் இராணுவத்தின் ஒரு பிரிவினரிடம் ஒப்படைத்திருப்தாக அவர்களிடம் அது சம்பந்தமாக விளக்கம் கேட்டவர்களிடம் கூறினர்! அப்போது இருந்த இராணுவம் என்ன ஜே.வி.பியினால் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவமா, அதிகாரத்தைக் கைப்பற்றி ஜே.வி.பியினரிடம் ஒப்படைக்க?

எனவே ஜே.வி.பி நடாத்திய ஆயுதக் கிளர்ச்சி என்பது முழுக்க முழுக்க இலங்கையில் வலதுசாரி சக்திகளின் கையை ஓங்க வைப்பதற்காகவும், முற்போக்கு சக்திகளைப் பலவீனப்படுத்துவதற்காகவும் திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஒரு எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இது ஒருபுறமிருக்க, சிறீமாவோ அரசாங்கம் ஆட்சியிலிருந்த 1970 – 77 காலகட்டத்தில் உலக உணவு நெருக்கடி உச்சகட்டத்தில் இருந்தது. அது இலங்கையிலும் பெரும்பாதிப்பை உண்டுபண்ணியது. அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மக்களுக்கு அரசாங்கம் வழங்கிவரும் மானியங்களை வெட்டும்படி, ஏகாதிபத்திய உலக வங்கி

ஆலோசனை கூறியது. ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக உள்நாட்டு உணவு உற்பத்தியை பெருக்குவதில் அக்கறை செலுத்தியது. அது எதிர்பார்த்த வெற்றி பெறாத சூழ்நிலையில், உலக வங்கியின் ஆணைப்படி செயற்படுமாறு அரசாங்கத்துக்குள் இருந்த பீலிக்ஸ் தலைமையிலான வலதுசாரி அணியினர் நெருக்கடி கொடுத்து அதில் வெற்றியும் பெற்றனர். அதன் காரணமாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இருந்த சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அரசைவிட்டு வெளியேற நேர்ந்தது. இடதுசாரிக் கட்சிகளின் இந்த முடிவு, முன்யோசனை அற்றது, அவசரத்தனமானது என்பதை பின்னர் 1977ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின.

இதன் காரணமாக 1977 பொதுத் தேர்தல் நெருங்கிய போது, சிறீமாவோ அரசாங்கம் பல பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியது. ஒரு பக்கத்தில் உணவு நெருக்கடியும் அதனால் ஏற்பட்ட மக்களின் அதிருப்தியும், மறுபக்கத்தில் இடதுசாரிகள் வெளியேறியதினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பலவீனமும், இன்னொரு பக்கத்தில் தமிழ் பிற்போக்கு சக்திகள் ஏகாதிபத்தியத்தினதும், ஐ.தே.கவினதும் உதவியுடன் நடாத்தி வந்த பிரிவினைவாதப் போராட்டங்களும், வேறொரு பக்கத்தில் ஜே.வி.பி நடாத்திய எதிர்ப்புரட்சி கிளர்ச்சியில் பங்குபற்றி உயிர் நீத்த இளைஞர்களின் குடும்பங்களிலிருந்து வந்த எதிர்ப்பும் என, அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தனிமைப்படுத்தப்பட்டு நின்றது. இதன் மொத்த விளைவாக 1977ல் நடந்த பொதுத் தேர்தலில், ஜே.ஆர்.ஜெயவர்த்ன தலைமையிலான அமெரிக்க சார்பு, படு பிற்போக்கு, வலதுசாரி அரசாங்கம், ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது.

ஜே.ஆர். ஆட்சிக்கு வந்ததும் செய்த முதல் வேலை, தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்செயல் ஒன்றை அரசே முன்னின்று நடாத்தி, அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆப்பு வைக்க முயன்றது தான். அதே வேளையில் அந்த இனவன்செயலை இடதுசாரிக் கட்சிகளே செய்தன என்று அவதூறாகக் குற்றம்சாட்டி, அவற்றுக்குத் தடை விதித்தது. மறுபக்கத்தில் சிறையில் இருந்த ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவையும் ஏனையவர்களையும் பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்து, அவர்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக நாடு முழுவதும் சென்று பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துமாறு தூண்டிவிட்டது. (விஜேவீர விடுதலை செய்யப்பட்ட போது, அவரை ஜே.ஆர். அரசில் மிக முக்கியமான நிதியமைச்சர் பதவியை வகித்த றொனி டீ மெல்லின் மனைவி தான் சிறைச்சாலையிலிருந்து அழைத்துச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது) தொழிற்சங்கங்களையும், மாணவர் அமைப்புகளையும் அடக்கியொடுக்கியது. தமிழ் மக்கள் மேல் இராணுவ ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறித்து, எதிர்க்கட்சியை முடமாக்கியது. கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலமும், சுதந்திர வர்த்தக வலயங்கள் மூலமும், நாட்டை அந்நிய ஏகபோகக் கம்பனிகளுக்குத் தாரைவார்த்தது.

இவ்வாறாக ஜே.ஆரின் ஐ.தே.க அரசு நாடு முழுவதும் ஒரு அரை பாசிச ஆட்சியை நிறுவியது. எல்லாத் துறைகளிலும் அரச பயங்கரவாதம் தலை விரித்தாடியது. குறிப்பாக தமிழ் பகுதிகளில் ஏவிவிடப்பட்ட இராணுவ பயங்கரவாதம் காரணமாக, அங்கு பல்வேறு இளைஞர்கள் குழுக்கள் உருவாகி, அவை தற்காப்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தன. அந்தப் போராட்டங்கள் பின்னர் முழு அளவிலான ஆயுதப் போராட்டங்களாக உருவெடுத்தன. அப்போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களில் பெரும்பாலானவை ஐ.தே.க அரசாங்கத்துக்கு மட்டுமின்றி, தமிழ் பிற்போக்கு சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய த.வி.கூவுக்கு எதிராகவும் செயல்பட்டதுடன், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உணர்வலைகளையும் கொண்டிருந்தன. எனவே அப்போராட்டங்களை ஒடுக்குவதற்கு ஐ.தே.க அரசாங்கத்திற்கு மேற்கத்தைய ஏகாதிபத்தியம் பூரண ஆதரவை வழங்கியது. மறுபக்கத்தில் மேற்குலகிற்கு எதிரான சோவியத் முகாமில் இருந்த இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசாங்கம், ஏகாதிபத்திய அடிவருடியான ஜே.ஆர் அரசுக்கு எதிராக தமிழ் போராளி இயக்கங்களுக்கு முழு அளவிலான ஆதரவை வழங்கியது.

ஜே.ஆர் அரசாங்கம் தமிழ் போராளி இயக்கங்களுக்கு எதிராக, ஏகாதிபத்திய உதவியுடன் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் அவர்களது போராட்டங்களை மேலும் மேலும் வளர்த்து விடவே பயன்பட்டன. அதனால் அவர்கள் இன்னொரு யுக்தியைக் கையாள ஆரம்பித்தனர். தமிழ் போராட்ட இயக்கங்களில் பெரும்பாலான இயக்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு எடுத்து, இந்திய ஆதரவையும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆயுதப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டிருந்த சூழலில், அவற்றிலிருந்து விலகிய ஒன்றாக புலிகள் இயக்கம் இருந்தது. அதே வேளையில் அது மிகவும் கட்டுப்பாடான, ஈவு இரக்கமற்ற ஒரு கொடூரமான இயக்கமாகவும் இருந்தது. எனவே ஐ.தே.க அரசும், ஏகாதிபத்திய சக்திகளும் புலிகள் இயக்கத்தை தமது கருவியாக உபயோகிக்க முடிவெடுத்தனர். அதன்படி புலிகள் இந்தியா தமக்கு வழங்கிய இராணுவப் பயிற்சிகளை நிராகரித்துவிட்டு, அமெரிக்க அடிவருடியான சியோனிஸ இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பிடம் பயற்சி பெற ஆரம்பித்தனர்.

புலிகளை வளர்த்து விட்டதன் மூலம், தமிழ் மக்களின் ஏனைய போராட்ட இயக்கங்களை அதன் மூலம் அழித்து, தமிழ் மக்களின் நியாயமான போரட்ட இயக்கத்தை வெறும் பயங்கரவாத இயக்கமாக மாற்றுவதில் ஐ.தே.க அரசும், ஏகாதிபத்தியமும் வெற்றி பெற்றன. அதன் மூலம் இலங்கை மக்கள் மத்தியிலும், உலக அரங்கிலும் தமிழ் மக்களுக்கு இருந்த தார்மீக ஆதரவு இல்லாதொழிக்கப்பட்டது. மறுபக்கத்தில் புலிகள் இயக்கத்தை இலங்கையின் ஏனைய இன மக்களுக்கு எதிராகவும், முற்போக்கு – ஜனநாயக சக்திகளுக்கு எதிராகவும், இந்தியா மற்றும் சோசலிச நாடுகளுக்கு எதிராகவும் மாற்றுவதில் அவர்கள் வெற்றி பெற்றனர். அத்துடன் புலிகளை தமக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்தும் வகையில், உலகின் முன்னணிப் பயங்கரவாத அமைப்பாக மாற்றி அமைத்தனர்.

முதலில் ஜே.வி.பி என்ற எதிர்ப்புரட்சி அமைப்பை உருவாக்கி, அதன் பின்னர் தமிழ் பிரிவினைவாத இயக்கத்தை ஆரம்பித்து வைத்து, பின்னர் ஜே.ஆர் தலைமையில் அரைப் பாசிச ஐ.தே.க அரசை நிறுவிய ஏகாதிபத்தியம், எல்லாவற்றுக்கும் கொடு முடியாக புலிப் பாசிச இயக்கத்தை வளர்த்து, இலங்கை முழுவதையும் முற்று முழுதான எதிர்ப்புரட்சிக் களமாக ஆக்கியது. அதன் மூலம் இலங்கையில் முடிவுறாத ஒரு உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கி, இலங்கையைச் சீரழித்ததுடன், இந்தியாவினதும், முழு ஆசியாவினதும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

அதே வேளையில், இலங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளுக்கு எதிரான புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏகாதிபத்தியம் ஊக்குவித்து வந்தது. மறுபக்கத்தில் பிற்போக்கு ஐ.தே.கவுக்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு முயன்று வந்தது. அதன் ஒரு முயற்சியாக 1990ல் ஐ.தே.க சார்பாக ஆர்.பிரேமதாச ஜனாதிபதியான போது, ஏகாதிபத்தியவாதிகள் பிரேமதாச அரசையும், புலிகளையும் ஐக்கியப்படுத்தி இந்திய அமைதிப்படையை வெளியேற்றியதுடன், இந்தியாவின் முயற்சியால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைக்கப்பட்ட, வடக்கு – கிழக்கு மாகாண சபையையும் கலைக்க வைத்து, புலிகளை மீண்டும் யுத்தப் பாதைக்குத் திசைதிருப்பி விட்டனர்.

பின்னர், இதே ஏகாதிபத்தியவாதிகள், 2002ல் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற வைத்து, அதன் மூலம் அவரது அரசை புலிகளுடன் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்ய வைத்து, இரு பிற்போக்கு, வலதுசாரி சக்திகளையும் ஒரு ஐக்கியத்துக்குக் கொண்டு வந்தனர். அதன் மூலம் இலங்கையில் முற்போக்கு சக்திகள் மீண்டும் தலையெடுக்காத வண்ணம் தடுப்பதற்கு முயன்றனர். ஆனால் ஐ.தே.கவினதும் புலிகளினதும் பிற்போக்கு நோக்கம் கொண்ட தேன் நிலவை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா முடிவுக்குக் கொண்டு வந்ததின் மூலம், ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கினார். அதைத் தொடர்ந்து 2005 டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முற்போக்கு இலங்கை மக்களின் பிரதிநிதியாக மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், அவரை தமது வலையில் வீழ்த்த ஏகாதிபத்திய சக்திகள் முதலில் முயன்றன. அது முடியாது என்பதை வெகு விரைவிலேயே புரிந்து கொண்ட அவர்கள், வழமை போலவே புலிகளைத் தூண்டிவிட்டு, மகிந்த அரசுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த வைத்தனர். அதன் மூலம் வழமைப் பிரகாரம் அரசாங்கத்தை புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நிலைக்கு இட்டு வந்து, இலங்கையில் சமாதானத்தின் மூலமோ, யுத்தத்தின் மூலமோ யுத்தத்துக்கு முடிவுகாண முடியாத ஒரு நிலையைத் திரும்பவும் ஏற்படுத்த முயன்றனா. அதற்காக அவர்கள், இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திலிருந்து வெளியேறிய சூழலைப் பயன்படுத்தி தம்மால் அங்கு நுழைக்கப்பட்டிருந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் மற்றும் யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இருவரையும் பயன்படுத்தினர்.

ஆனால் மகிந்த அரசு பாசிசப் புலிகளினதும், அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களினதும் சதித் திட்டங்களை நன்கு புரிந்து கொண்டதுடன், புலிகளை முற்று முழதாக ஒழித்துக் கட்டும் இராணுவ நடவடிக்கைகளை உறுதியுடன் முடுக்கிவிட்டது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் தேசபக்த – ஜனநாயக – முற்போக்கு சக்திகள் தமது பூரண ஆதரவை வழங்கியதுடன், இலங்கையின் உண்மையான நட்பு நாடுகளான இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஸ்யா, ஈரான், லிபியா, வியட்நாம், கியூபா, வெனிசுவேலா, வட கொரியா உட்பட ஏராளமான ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும் பூரண ஆதரவளித்தன. அதன் மூலம் இலங்கையில் முப்பது வருடங்களாக ஏகாதிபத்தியத்தின் ஏற்பாட்டில் நீடித்து வந்த கொடிய உள்நாட்டு யுத்தத்தை, 2009 மே 18ம் திகதி மகிந்த அரசு ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை ஈட்டியதில், இலங்கையின் தேசபக்திமிக்க ஆயுதப்படைகள் ஒரு சிறப்பான பாத்திரத்தை வெளிப்படுத்தி, தமது வரலாற்றுப் பங்களிப்பை நாட்டுக்கக் காணிக்கையாக்கினர்.

வன்னியில் நடைபெற்ற இறுதியுத்தத்தின் போது, புலிகளை அழிவிலிருந்து காப்பாற்றவதற்கு சகல சர்வதேச நடைமுறைகளையும் மீறி, அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் வெளிப்படையாகவே செயற்பட்டன. ஆனால் மகிந்த அரசாங்கம் தனக்கு முன்னர் பதவியில் இருந்த அரசாங்கங்களைப் போலல்லாது, உறுதியுடன் நின்று ஏகாதிபத்தியவாதிகளின் சகல சதிகளையும் முறியடித்து, பாசிசப் புலிகள் இயக்கத்தை முற்று முழுதாக அழித்தொழித்தது. அதன் மூலம் இலங்கை மக்களை 30 ஆண்டுகள் நீடித்த மாபெரும் துன்பத்திலிருந்து மீட்டெடுத்தது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்துவதற்கு திட்டங்களை வகுத்துச் செயல்பட ஆரம்பித்தது. அத்துடன் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தவும், அவர்களுக்கு ஒரு இயல்பு வாழ்க்கையை உருவாக்கவும், இறுதியாக இனப் பிரச்சனைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் காணவும் அர்ப்பணிப்புடன் செயல்பட ஆரம்பித்தது. இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் வெற்றிகரமாக செய்து முடிக்குமாயின், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான முற்போக்கு அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்துவது சாத்தியமில்லை என்பதை ஐ.தே.க தலைமையிலான பிற்போக்கு சக்திகளும், அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களும் நன்கு உணர்ந்து கொண்டனர்.

எனவே அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க் குற்றங்களைச் சுமத்தி, அதை சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் முயற்சியில் இறங்கினர். இலங்கை அரசு மனித உரிமைகளை மீறுகிறது, ஊடக சுதந்திரத்தை நசுக்குகிறது, இடம் பெயர்ந்த மக்களை தடுப்பு முகாம்களில் வைத்து கொடுமைப்படுத்துகிறது போன்ற போலியான குற்றச்சாட்டுகளைச் சமத்தி, இலங்கைக்கு சர்வதேச அரங்கில் அவதூறு ஏற்படுத்தும் வகையில், பிரச்சாரங்களை மேற்கொண்டனர். இவைகள் எல்லாவற்றையும் இலங்கை அரசு தனது நாட்டு மக்களின் உதவியுடனும், நேச நாடுகளின் உதவியுடனும் வெற்றிகரமாக முறியடித்தது. இதனால் ஆத்திரமடைந்த ஏகாதிபத்தியவாதிகள், இலங்கைக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் வழங்கிவந்த ஜி.எஸ்.பி வரிச் சலுகையை நிறுத்தி, நாட்டில்

பொருளாதார நெருக்கடியை உருவாக்க முயன்று வருகின்றனர். ஆனால் அதையும் இலங்கை அரசு தனது உள்நாட்டு பொருளாதார அபிவிருத்தி மூலமாகவும், நேச நாடுகளின் உதவியுடனும் நிச்சயம் முறியடிக்கப் போவது போவது திண்ணம்.

இவ்வளவு எதிர்ப்புரட்சி சீர்குலைவு நடவடிக்கைகளையும் இலங்கைக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகள் மேற்கொண்ட போதும், அவர்களால் இலங்கை அரசையும் மக்களையும் தமது வழிக்குக் கொண்டுவர முடியாது என்பது தெளிவாகிவிட்டது. எனவே தான் அவர்கள் ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்தி, இலங்கையில் தமக்கு ஏதுவான ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரும் பகீரத முயற்சிகளில் தற்போது இறங்கியுள்ளனர். அதற்காக அவர்கள் புலிப் பாசிசவாதிகளை தோற்கடிப்பதில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்த முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விலைக்கு வாங்கியுள்ளனர். அவருக்குப் பின்னால், இலங்கை அரசியலில் கடந்த 40 வருடங்களாக எதிர்ப்புரட்சி அரசியல் நடாத்தி வந்த, ஐ.தே.க, ஜே.வி.பி., த.தே.கூ என்பன அணிவகுத்து நிற்கின்றன. அது மாத்திரமின்றி, சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக சகல உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளும் அணிவகுத்துள்ளன. அது மட்டுமின்றி, ஏகாதிபத்திய சக்திகளினால் வளர்க்கப்படும் சகல என்.ஜி.ஓ ஒட்டுண்ணிகளும், முதலாளித்துவ ஊடகங்களும், பெரும் முதலாளிகளும் அவரின் பின்னால் அணிவகுத்துள்ளனர். பல நேர்மையான அரசியல்வாதிகள் கூட ஏகாதிபத்தியவாதிகள் வாரியிறைக்கும் கோடிக்கணக்கான பணத்தில் விலைக்கு வாங்கப்படுகின்றனர்.

இந்தத் தேர்தலில் ஒரே அணியில் நிற்கும் ஐ.தே.க, ஜே.வி.பி, த.தே.கூ என்பனவற்றைப் பார்த்து சிலர் ஆச்சரியம் தெரிவிப்பதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் கடந்த காலத்தில் ஐ.தே.கவும் ஜே.விபியும் எதிரும் புதிருமான அரசியல் நடாத்தி வந்துள்ளன. ஒன்று முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க, மற்றது தொழிலாள வர்க்கத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுவதாகக் காட்டி வந்துள்ளது. அதே போல த.தே.கூ தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்த, ஜே.வி.பி தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லை, எனவே அவர்களுக்கு எவ்வித தீர்வுகளையும் வழங்கத் தேவையில்லை எனக் கூறி வந்துள்ளது. இப்படியான கட்சிகள் எவ்வாறு ஒரே அணியில் நின்று செயல்படுகின்றன என பலர் கேள்வி எழுப்புகின்றனர் உண்மையில் இந்தக் கட்சிகள் கடந்த காலத்தில் பாராளுமன்ற அரசியலில் எதிரும் புதிருமாகச் செயல்பட்டது உண்மைதான். ஆனால் இம்மூன்று கட்சிகளும், கடந்த காலங்களில் இலங்கையில் எதிர்ப்புரட்சி சூழலை உருவாக்குவதில், வெவ்வேறு விதமான முறைகளில், ஆனால் ஒரே நோக்கத்துக்காக, ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு வந்ததை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

ஏனெனில் அவர்களைப் பொறுத்த வரையில், இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு ஜீவ மரணப் போராட்டமாகும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், பல தசாப்தங்களக்கு இலங்கையில் தமக்கு சாதகமான ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர இயலாது என்பது அவர்களுக்குத் தெரியும். அதே வேளையில் அவர்களுக்கு மட்டுமல்ல, இலங்கையின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நேசிக்கும் சகல மக்களுக்கும் கூட இது ஒரு ஜீவ மரணப் போராட்டம் தான். ஏனெனில் அவர்கள் நீண்ட காலம் போராடிப் பெற்ற 1948ம் ஆண்டுச் சுதந்திரத்தையும், 2009ல் புலிகளின் பாசிசத்துக்கு எதிராகப் பெற்ற ஜனநாயக சுதந்திரத்தையும் பாதுகாப்பதாக இருந்தால், சரத் பொன்சேகா தலைமையில் அணிதிரண்டு நிற்கும், பிற்போக்குவாத, ஏகாதிபத்தியவாத சக்திகளைத் தோற்கடிப்பது மிக அவசியமாகும்.

இந்தத் தேர்தலில் எப்படியும் தமது வேட்பாளர் சரத் பொன்சேகாவை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, எதிர்க்கட்சியினர் இன்று இல்லாத, பொல்லாத பொயப் பிரச்சாரங்களைச் செய்து வருகின்றனா. தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும், தமிழ்ப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி, இராணுவ முகாம்களை மூடப் போவதாகவும், அவசரகால சட்டததை நீக்கப் போவதாகவும், போரின் இறுதிக் காலத்தில் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களை விடுதலை செய்யப் போவதாகவும் பல போலி வாக்குறுதிகளை சரத் பொன்சேகா, தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார்.

அதே போல, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதாகவும், மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப் போவதாகவும், லஞ்சம் - ஊழலை இல்லாதொழிக்கப் போவதாகவும், ஊடக சுதந்திரததை பாதுகாக்கப் போவதாகவும், நாட்டில் ஜனநாயக சுதந்திரத்தை நிலைநாட்டப் போவதாகவும் தென்னிலங்கை மக்கள் மத்தியிலும் சில பொய் வாக்குறுதிகளை பொன்சேகா வழங்கி வருகிறார்.

ஆனால் உண்மையில் பொன்சேகா இவையெல்லாவற்றையும் செய்யப் போவதில்லை என்பது விடயமறிந்தவர்களுக்குத் தெரியும். ஏனெனில் சரத் பொன்சேகா தான் நினைத்ததைச் செய்வதற்கு அவரிடம் சொந்தமாக ஒரு கட்சி இல்லை. பொன்சேகா வெற்றி பெற்றால், அவர் செய்ய வேண்டியவை என அவரை ஆதரிக்கும் பிரதான கட்சிகள், வெவ்வேறான விடயங்களைக் கூறுகின்றனா. இதிலிருந்தே அவரால் சுயாதீனமாக எதையும் செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அவர் வெற்றி பெற்றால் நடக்கக் கூடியது, பெரும்பாலும் பாகிஸ்தான், பர்மா போன்ற நாடுகளில் உள்ளது போன்ற ஒரு இராணுவப் பாணியிலான ஆட்சியை நடைமுறைப்படுத்துவதாகத்தான் இருக்கும். அவர் ஒருபோதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கப் போவதில்லை. அதை மேலும் பலப்படுத்துவார். தனக்கென ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவதில் கவனம் செலுத்துவார். தனக்கு தேவையில்லாத, தான் விரும்பாத அழுத்தங்களைக் கொடுக்கும் அரசியல் சக்திகளை, அவர்கள் ஐ.தே.க, ஜே.வி.பி, த.தே.கூ வைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தேவையேற்படின் அவர்களை சிறைகளில் தள்ளவும் தயங்கமாட்டார். அவர் முன்னாள் இராணுவத்தளபதி என்ற வகையில், மற்றெந்த அரசியல்வாதிக்கும் கிடைக்காத ஆதரவு இராணுவத்திடமிருந்து கிடைக்கலாம். அவரது நடவடிக்கைகளுக்கு ஏகாதிபத்திய சக்திகளின் பூரண ஆதரவும் கிடைக்கும் என்பது நிச்சயம். ஏனெனில் அதற்காகத்தான் அவர்கள் அவரை ஆட்சிக்குக் கொண்டுவர பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

எனவே இந்த ஜனாதிபதித் தேர்தல் என்பது, வெறுமனே ஒரு நல்லாட்சிக்கான மாற்றம் அல்ல. இந்தத் தேர்தல் போராட்டம் ஒரு குருசேத்திர யுத்தம். தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற மகிந்த ராஜபக்சவை, மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதின் மூலமாக, நாட்டின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாத்து, நாட்டின் முன்னேற்றப் பாதையை தொடர்ந்து முன்கொண்டு செல்வதா அல்லது எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் சரத் பொன்சேகாவை வெற்றி பெறச் செய்வதின் மூலம், ஒரு இராணுவ பாணியிலான ஆட்சியை அவர் கொண்டு வருவதற்கு அனுமதித்து. நாட்டை ஒரு இருண்ட யுகத்துக்கு இட்டுச செல்ல அனுமதிப்பதா என்பதை, மக்கள் இந்தத் தீர்க்கமான கட்டத்தில் முடிவு செய்வது அவசியம்

எனவே நாட்டின் ஜனாதிபதி தேர்தல் களத்தில் ஏகாதிபத்தியத்துக்கும், அதன் அடிவருடிகளுக்கும் ஒரு புறத்திலும், தேசபக்த – ஜனநாயக – முற்போக்கு சக்திகளுக்கு மறுபுறத்திலுமாக நடைபெறுகின்ற, இந்தத் தரும யுத்தத்தில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வெற்றி பெறச் செய்வதன் மூலம், அவரை ஒரு கேடயமாகப் பயன்படுத்தி, மக்கள் விரோத சக்திகளைத் தோற்கடிப்பதற்கு, சகல முற்போக்குச் சக்திகளும் முன் கையெடுத்துச் செயல்படுவது காலத்தின் தேவையும், வரலாற்றுக் கடமையுமாகும்.

**மார்க்சிச – லெனினிச ஆய்வு மையம்**
**இலங்கை**
**23 - 01 - 2010**

எமது வெளியீடுகள் தொடர்பாக உங்கள் கருத்துகளை அனுப்பி வைப்பதற்கும் மார்க்சிச - லெனினிச ஆய்வு மையத்தின் முன்னைய வெளியீடுகளை பெற்றுக்கொள்வதற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய எமது மின்னஞ்சல் முகவரி: 100pookkal@gmail.com